**41 விறகு விற்ற படலம்**

வட நாட்டினின்று வந்த ஏமநாதன் என்னும் யாழ்ப்பாணன், வரகுண பாண்டியனால் மிகவும்கௌரவிக்கப்பட்டு பல பரிகளையும் விருது களும் பெற்றன். இதனால் அவன் இறுமாப்படைந்தான். தன்னோடு இசை பாட வல்ல யாழ்ப்பாணர் பாண்டியநாட்டில் இல்லைபோலும் என இறுமாப்போடு இருந்தான்.

மதுரையில் வசிக்கும் பாணபத்ரர் எனும் யாழ்ப்பாணரை அழைத்து போட்டியிடுமாறுவேண்டினான் பாண்டியன். கடவுளின் அருளாலும் அரசனின் ஆசியாலும் ஏமநாதனைவெல்வதாக கூறினான் பாணன். ஐயனிடம் தன்னைக் காக்கும் படி வேண்டினான்.

அவனுக்கு அருள ஐயன் விறகு வெட்டி வேடம் ஏற்று ஏமநாதன் தங்கி இருந்த வீட்டின் முன்இனிமையாகப் பண்ணிசைத்தார். இந்த இசையில் உலகமே அசைவற்று நின்றது. இதனைக்கேட்ட ஏமநாதன் அவரின் விவரம் கேட்டான். இளைய வயதில் தான் பாணனிடம் இசைப் பயிலசென்றதாகவும், என்ன கற்பித்தும் தன் புத்தி ஏற்காததால் பாணர் தன்னை துரத்தி விட்டதாகக்கூறினான். அதன் பின் தான் விறகு வெட்டி பிழைத்து வாழ்வதாகக் கூறினான். திரும்பவும்பாணபத்திரன் விறகு வெட்டியை அதே பாட்டை பாடச் சொன்னான். முன்பு பாடியதை விடஅழகாகப் பாடினான் விறகு வெட்டி.

சாதாறிப் பண்ணில் அவன் பாடியது ஏமநாதனை உலுக்கியது. அப்படியே அவன் மயங்கிவிட்டான். எவருக்கும் தெரியாத சாதாறிப் பண்ணை சர்வ சாதாரமாகப் பாடியவனையே தனதுசீடனாக ஏற்றுக் கொள்ளாத பாணபத்திரன்மறுத்ததால், பாணன் எப்படி பாடுவானோ என பயந்த ஏமநாதன் போட்டியிடாமலேயே இரவோடு இரவாக தன்னுடைய சீடர்களோடு பொருள்களுடன் வடதிசையை நோக்கி சென்று விட்டான்.

பாணன் வரகுண பாண்டியனிடம் நடந்தவற்றைக் கூறினார். தன் வேண்டுதலின் பொருட்டு விறகு சுமந்து, தான் பாணரின் அடிமை என எல்லோரும் கூறும் படி செய்த ஐயனை நினைத்து உருகிவருந்தித் துடித்தான் பாண்டியன். பாணர் மூலம் விவரமறிந்த மன்னன் சோமசுந்தரின்திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்தான். பாண பத்திரனிடம் பல தேவர்களும் தமக்கு ஏவல் புரியகாத்து நிற்கும் சிவபெருமான் பாணருக்காக விறகு சுமைத்தூக்கி பாணரின் அடிமை என்று தன்னை உரைத்தது எண்ணி மகிழ்ந்து, பாணரே தமக்கு தலைவர் என்றான். பல பரிசுகள்கொடுத்து சோமசுந்தர்ரைப் பாடுதலே இனி பாணபத்திரனின் கடமையாகும் என வேண்டிக் கொண்டான் பாண்டியன்.

**பல்லவி**

ஏம நாதன் கர்வம் அறிந்தபாண்டியன் - பாண
பத்ரனை அவனுடன் போட்டியாய் பாடச் சொன்னான்

**அனுபல்லவி**

ஏமன் வாசல் திண்ணையில் விறகு வெட்டிச் சென்று
சாதாறி  பண்ணை வெகு சாதாரணமாய் இசைத்தீர்

**சரணம்**

பாடிய பின்  உன்னை நீ பாணன் அடிமை என்றதும்
ஏமநாதனும் விரைவில் ஏகினான் ஊரினின்றும்
நாடிய பாண்டியனுக்கு அருளிய விதம் தனை
நாடாளும் மன்னனிடம் கூறினான் பாணபத்ரன்